MINISTRY OF HEALTH
SINGAPORE

National Healthcare Group — Adding years of healthy life
NUH National University Hospital — A member of the NUHS
Alexandra Health
EASTERN HEALTH ALLIANCE
Jurong Health
SingHealth

SINGHEALTH / PIL / T109R0

நோயாளி தகவல் கையேடு

# லெவோடோபா தயாரிப்புகள்

## (LEVODOPA PREPARATIONS)

## உங்கள் மருந்து **பற்றிய** தகவல்

### லெவோடோபா (Levodopa) மருந்துகள், பென்செரசைட் (benserazide) அல்லது கார்பிடோபா (carbidopa) மருந்துகளுடன் கலந்து தயாரிக்கப்படுகின்றன. இம்மருந்து பார்கின்சன் நோய்ச் சிகிச்சையில் பயன்படுத்தப்படுகிறது. நோயாளிகளின் தசைக் கட்டுப்பாட்டை மேம்படுத்துவதன் மூலம், அவர்களின் உடல் அசைவுகள் முடிந்தவரை வழக்கநிலையில் இருப்பதற்கு இவை உதவுகின்றன.

## மருந்தை நான் **எப்படி** உட்கொள்ள வேண்டும்?

பிரச்சினையின் கடுமைக்கேற்ப, நீங்கள் பயன்படுத்த வேண்டிய மருந்தின் அளவை மருத்துவர் தீர்மானிப்பார். இந்த மருந்தை மருத்துவர் கூறும் அளவில் பயன்படுத்துங்கள்.

லெவோடோபா மருந்துகள் முதலில் குறைந்த அளவில் ஆரம்பிக்கப்படுகின்றன மற்றும் மருந்திலிருந்து திருப்திகரமான பலன் கிடைப்பதற்கு அவை படிப்படியாக உயர்த்தப்படுகின்றன. மருந்து நல்ல பலன் தருவதற்கு அதை வேளை தவறாமல் எடுத்துவர வேண்டும். இம்மருந்துகளை வெறும் வயிற்றில் எடுப்பதே சிறந்தது. எனினும், இரைப்பையில் பாதிப்பு ஏற்பட்டால், மருந்தை உணவுடன் எடுத்துக் கொள்ளலாம்.

சிறப்புக் குறிப்புகள்:
கரையக்கூடிய மாத்திரைகள் தரப்பட்டால், அவற்றைத் தண்ணீரில் கரைத்து அரை மணி நேரத்திற்குள் குடித்துவிட வேண்டும். குடிப்பதற்குமுன் அதை நன்றாகக் கலக்க வேண்டும்.

மருந்தை மெதுவாக வெளிவிடும் மாத்திரைகள் என்றால், அவற்றை அப்படியே முழுதாக விழுங்க வேண்டும். அவற்றை மென்றோ அல்லது துளாக்கியோ விழுங்கக் கூடாது.

மருந்திலிருந்து முழுப் பலன் பெறுவதற்கு, சில நோயாளிகளுக்கு, பல வாரங்கள் அல்லது மாதங்கள் ஆகலாம். மருந்து வேலை செய்யவில்லை என்று நீங்கள் நினைத்தாலும்கூட மருந்தை நிறுத்தாதீர்கள்.

உங்கள் உடல்நிலையைப் பொறுத்து மருந்தின் அளவு மாறிக் கொண்டே இருக்கும் என்பதால், தற்போது நீங்கள் எடுத்துவரும் மருந்தின் பெயரையும் வீரியத்தையும் குறித்து வைத்துக் கொள்ளுங்கள். அப்போதுதான் குழப்பம் ஏற்படாது.

## மருந்து உட்கொள்ள **மறந்துவிட்டால்** என்ன செய்வது?

ஒரு வேளைக்குரிய மருந்தை எடுக்கத் தவறிவிட்டால் அல்லது மறந்துவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே உட்கொள்ளுங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், முதலில் எடுக்கத் தவறிய மருந்தை எடுக்காமல் விட்டுவிட்டு, அடுத்த வேளை வரை காத்திருங்கள். முதலில் எடுக்கத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு மருந்தோ அல்லது கூடுதல் மருந்தோ உட்கொள்ளாதீர்கள். மருந்தைப் பலமுறை எடுக்கத் தவறியிருந்தால், என்ன செய்ய வேண்டும் என்பதை மருத்துவரிடம் கேளுங்கள்.

மருந்துகளை எப்போதும் பிள்ளைகளின் கைகளுக்கு எட்டாத இடத்தில் வைத்திருங்கள்
காலாவதியான அல்லது இனிமேல் தேவைப்படாத மருந்துகளை வீசிவிடுங்கள்

## மருந்து ஏற்படுத்தக்கூடிய **பக்க-விளைவுகள்** யாவை ?

பின்வரும் பக்க-விளைவுகள் ஏற்படலாம்:
**இரைப்பைசிறுகுடல்** : குமட்டல், வாந்தி, பசியின்மை, நாக்கில் சுவை மாறுதல், வாயில் எச்சில் அளவுக்கு அதிகமாக ஊறுதல், விழுங்க சிரமப்படுதல்.

**இருதயஇரத்தஓட்டம்** : குறைந்த இரத்த அழுத்தம் (இதனால் படுத்துவிட்டு, உட்கார்ந்துவிட்டு அல்லது குந்திவிட்டு எழும்போது தலைக்கிறுகிறுப்பு, தலைச்சுற்றல் அல்லது மயக்கம் ஏற்படலாம்) மற்றும் ஒழுங்கற்ற இதயத்துடிப்பு.

**மத்திய நரம்பு மண்டலம்:** கலவரம், பரபரப்பு, குழப்பம், பயங்கரக் கனவுகள், மனப்பிரமை, மனநிலை மாற்றங்கள்.

**நரம்பு, தசை மற்றும் எலும்பு**: அதிகமான கை நடுக்கம், தடுமாற்றம் அல்லது தள்ளாடுதல், கட்டுக்கடங்காத உடல் அசைவுகள் (முகம், நாக்கு, புஜங்கள், கைகள், தலை மற்றும் உடலின் மேல் பாகம்), வழக்கமில்லாத களைப்பு/பலவீனம் மற்றும் மரத்துப்போதல்

**கண்** : தெளிவற்ற பார்வை.
**மற்றவை:** வேர்வை, சிறுநீர் மற்றும் எச்சில் கருநிறமாகுதல் மற்றும் சிறுநீர் கழிக்கச் சிரமப்படுதல்.

## நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை?

மற்ற மருந்துகள், மூலிகைகள், ஊட்டச்சத்து உணவுகள் அல்லது வைட்டமின்களை ஏற்கனவே உட்கொண்டு வந்தால், அதை மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் தெரிவியுங்கள்.

வேறு மருந்துக்கு ஒவ்வாமை இருந்தால், அல்லது இந்த மருந்துக்கு ஒவ்வாமை ஏற்பட்டால், மருத்துவரிடம் கண்டிப்பாகத் தெரிவிக்க வேண்டும். ஒவ்வாமையின்போது பின்வரும் அறிகுறிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டது இருக்கும்: முகம்/கண்கள்/உதடுகள் வீங்கும், மூச்சுவிட சிரமமாக இருக்கும், அல்லது உடல் முழுவதும் அரிப்புடன் கூடிய தோல் தடிப்புகள் தோன்றும்.

இந்த மருந்துகள் மந்த நிலையையும் தெளிவற்ற பார்வையையும் ஏற்படுத்தக் கூடியவை என்பதால், வாகனம் ஓட்டும்போது அல்லது இயந்திரங்கள் இயக்கும்போது கவனமாக இருங்கள். மேலும், படுத்துவிட்டு அல்லது உட்கார்ந்துவிட்டு எழும்போது கிறுகிறுப்பு, தலைச்சுற்றல் அல்லது மயக்கம் ஏற்பட்டால், மெதுவாக எழுந்திருங்கள்.

நோயின் அறிகுறிகளில் முன்னேற்றம் காணப்பட்டாலும், உடல் சார்ந்த நடவடிக்கைகளில் படிப்படியாகவே ஈடுபடுங்கள். இது உங்களின் தற்போதைய உடல் சமநிலை மற்றும் உடல் இயக்கத்திற்கு ஏற்றவாறு உங்களை மாற்றிக் கொள்ள உதவும்.

மருந்துகளை ஒருபோதும் திடீரென்று நிறுத்தாதீர்கள்.

நீங்கள் தாய்ப்பால் கொடுத்து வந்தால், கர்ப்பமாக இருந்தால், அல்லது சிகிச்சைக் காலத்தில் கர்ப்பமடைவதற்கு வாய்ப்பு இருந்தால், அதை மருத்துவரிடம் தெரிவியுங்கள்.

## மருந்தை நான் எப்படிப் பாதுகாக்க வேண்டும் ?

மருந்தின்மீது வெப்பமோ நேரடி வெளிச்சமோ படாதவாறு, அறை வெப்பநிலையில், ஓர் உலர்ந்த இடத்தில் வைத்திருங்கள். உங்களிடம் கூறப்பட்டாலன்றி, மருந்துகளை குளிர்ப் பதனப் பெட்டியில் வைக்காதீர்கள்.